[திரு. கே. இராஜா முகமது] [1979 மார்ச் 30

மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, நானும் இங்கே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட குறைபாடுகளின் காரணமாக, இந்தச் சட்டத்தையே எதிர்த்து, வழக்குமன்றத்திற்குச் சென்று, இந்தச் சட்டமே செயல் படாத முறையில், அவர்கள் ஈடுபடுவார்கள் என்று கருத்து தெரிவித்ததை நானும் அறிவேன். எனவே, அவை மீறிய செயலாக இதைக் கருதத் தேவையில்லையென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தைக் கேட்ட பிறகு இப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் மீது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது; திரு. சுப்பு அவர்களைச் சுருக்கமாகப் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10—10]

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் கொடுத்த தீர்மானத்தைப் படித்து விடுகிறேன். அதற்குப்பிறகு இரண்டொரு நிமிடங்களில் நான் பேசி முடித்து விடுகிறேன்.

Under Rule 184 of the Assembly Rules, I am giving notice to raise the following matter of privilege against the Inspector-General of Police, Mr. E. L. Stracey, on the floor of the House, viz :—

"The Inspector-General of Police, Mr. E. L. Stracey, has met the Press at Trichy on 28th March 1979 and made certain important announcements about the major changes in this Police Department. The Report of the Press Conference has been given wide coverage in the dailies like the "Indian Express" "Malai Murasu" etc. The statement of the I.G. contains the following announcements among other things".

1. The State Police will be headed by a Director-General who will be a senior I.P.S. Officer.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.: படித்துவிட்டால் போதும். பிறகு பேசவேண்டாம் என்று நினைக்கிறேன்.

1979 மார்ச் 30]

திரு. க. சுப்பு : படித்துவிட்டு, ஓரிரு பாயின்ட் மட்டும் பேசிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேண்டாம். கொடுத்துள்ள தீர்மானத்தை மட்டும் படித்து விடுங்கள். அதுவே முழுமையாக இருக்கிறது. அதையும் மீறி பேசப்போகிறீர்கள் என்றால், தீர்மானம் என்னிடத்தில் இருக்கிறது. உங்கள் கருத்தை மட்டும் சொல்லுங்கள். அதைப் படிக்கவேண்டாம்.

திரு. க. சுப்பு : படித்து விட்டு பிறகு கருத்து சொல்வது தான் சரியாக வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் படிக்கிறபோதே கருத்து இந்த அவைக்கு புரிந்துவிடும். அதற்கு மேலே பேசவேண்டியது இல்லை.

திரு. க. சுப்பு : அதற்கு மேலே இருந்தால் பேசுகிறேன். இல்லாவிட்டால் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி.

Thiru K. Suppu—

2. The Director - General will be assisted at the head quarters by three Inspectors-General of Police who will assume different functional responsibilities.

3. The three New Inspector-General proposed are:

Inspector General of Police (Enforcement) who will be incharge of enforcement of the Tamil Nadu Prohibition Act, the protection of Civil Rights Act, and other Acts.

I. G. of Police (Services) who will be in-charge of matters of administrations, Registration of crimes, etc.

Inspector-General of Police (Emergency Services) who will be in.charge of emergencies like Major Law and Order situation in the State, rioting, natural calamities like floods, fire and drought, Home Guadrs, etc."

The Director General-will be the Co-ordinating authority and his word will be final.

It is also proposed to upgrade the post of Commissioner of Police in Madras City to the rank of additonal Inspector-General ".

" Under the proposed Re-organisation some of the D.I.G.'s post might be abolished; for instance the post of Railway and Armed Reserve Police D.I.G. might go. Railway and Armed Reserve Police might come under the I.G. (Services)

" Mr. Stracey said it was proposed to permit Women Police in the State to wear Khaki Sarees and Khaki Shirts or Blouses instead of Khaki Pants and Khaki Shirts.

" The Women Police now functioing in Madras City, Madurai, Coimbatore and Trichirappalli would be extended to the other Cities of State.

These announcements of the I.G. are very important in nature and related to policy matters of the Government. Such announcements are expected to be made by the Hon.Chief Minister, particularly on the floor of the House, when the Assembly is in Session. In any event the Officials are not expected to make such statements assuming the role of the Ministers. The Government is understood to have given clear instructions to the officials not to make such statements excepting that of routine nature. It is the exclusive right andthe previlege of the House to revive such announcements from the Minsters at the first instance.

In the light of these observations it is clear that the I.G. of Police has deliberately violated the instructions of the Government in making such statements, especially when the Assembly is in Session. Therefore, the conduct of the I.G. assuming the role of the Hon. Chief Minister will certainly amount to contempt of the House and oppose to the established norms and principles of Parliamentary democracy . . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அதைத்தான் நான் சொன்னேன், நீங்கள் கொடுத்துள்ள அறிக்கையிலேயே தெளிவாக இருக்கிறது. அதைப் படித்து விட்டீர்கள். மேலே விளக்க என்ன இருக்கிறது? .ஒரு .உரிமை மீறல் தீர்மானம் 1½ பக்கம் கொடுத்து, அதில் கடைசி பாராவில் எல்லாவற்றையும் விளக்கியிருக்கிறீர்கள். அதையே திரும்ப விளக்கி தமிழில் பேசவேண்டியது இல்லை.

<u>திரு. க. சுப்பு :</u> நான் சொல்லிவிடுகிறேன். . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இதுவரைக்கும் யாரும் 1½ பக்கம் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்தது இல்லை. நீங்கள் தான் கொடுத்து இருக்கிறீர்கள். அது அனுமதிக்கப் பட்டு இருக்கிறது.

திரு. க. சுப்பு : இனிமேல் வேண்டுமானால் அனுமதிக்க வேண்டாம். இப்போது பேச விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கம்பிளிட்டாக படித்து விட்டீர்கள். கடைசி பாராவில் நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டீர்கள். மேலும் அனுமதிப்பது முறையல்ல. இப்படிப்பட்ட முறையை இனி அனுமதிக்க முடியாது. எல்லாவற்றையும் சொல்லிவிட்ட பிறகு அதைத் தமிழாக்கம் செய்து பேசுவது அவையின் நேரத்தை வீணாக்குவது மாதிரி உள்ளது.

திரு. க. சுப்பு : நான் அதிலே சொன்னவற்றைச் சொல்லவில்லை. இது பிரைமபேசி எப்படி பிரிவிலேஜ் ஆகும் என்கிற ஆர்கியூமென்டை எழுதிக்கொடுக்க முடியாது. ஆகவே அதைமட்டும் சொல்வதற்கு அனுமதிக்கவேண்டும். தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த சட்டமன்றத் திற்கு பொறுப்பானவர்கள். இந்த சட்டமன்றம் மக்களுக்குப் பொறுப்பானது. கொள்கை முடிவுகளைப் பற்றி காபினட் அமைச்சர்கள் அறிவிக்க வேண்டும். அப்படித்தான் நிதிநிலை அறிக்கையிலும் போலீஸ் துறை விவாதத்திலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் டீட்டேய்ல்ஸ் கொடுக்கப் படவில்லை. எப்படி இருந்தாலும் அமைச்சர்கள்தான் கொள்கை முடிவுகளைப்பற்றி அறிவிக்க வேண்டும்; ஏனென் றால் கொள்கைகளை வகுப்பவர்கள் அவர்கள்தான்; அமைச் சர்கள்தான் அதுபற்றி முடிவு செய்கிறார்கள். அதனால் அமைச்சர்கள் தான் அறிவிக்க வேண்டும். அந்த முறையில் தான் ஜனநாயக மரபை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

மின்சாரத் துறை அமைச்சர் ஒருமுறை பிரஸ் கான்ஃபிரன்ஸ்' ஒன்றை முக்கியமான அறிவிப்பை வெளியிடுவதற்காக கூட்டினார்கள். அதற்காக அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். ஆனால் அதற்கு முன்னால் அதற்கு முந்தின நாள் எலெக்ட்ரிசிட்டி சேர்மேன் பிரஸ் கான்பிரன்சை கூட்டி, அறிவித்து விட்டார். அதற்குப் பின்னால் அமைச்சர் அந்த பிரஸ் கான்ஃபிரன்சை கான்சல்' செய்ய வேண்டி வந்தது. அதிகாரிகள் எல்லாம் இப்படி அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை அறிவிக்கும் நிலைமை ஏற்பட்டால் அமைச்சர்களுக்கு இப்படிப் பட்ட இக்கட்டான சூழ்நிலை உருவாகத்தான் செய்யும்.

அமைச்சர்கள்தான் இப்படிப்பட்ட கொள்கை முடிவுகளை அறிவிக்க வேண்டுமென்று அரசு ஆணை இருக்கிறது; உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் அறிவிப்பதாக இருந்தாலும் சட்டமன்றம் நடைபெறும்போது முதலில் இங்கேதான் அறிவிக்க வேண்டும். அதற்கும் ஆணை இருக்கிறது.

அதை மீறியிருக்கிறார் இந்த ஐ.ஜி. ஏற்கெனவே இவருக்கு 6 மாதம் சர்வீஸ் எக்ஸ்டன்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் இப்படி விதிகளுக்குப் புறம்பாக அமைச்சர்களின் வேலையை செய்கின்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை அவரே அறிவிப்பதற்காக அதுவும் இந்த சட்ட மன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இங்கே தெரியாமல் வெளியிலே அறிவிப்பதற்காக இன்னொரு எக்ஸ்டன்ஷன் கொடுக்க வேண்டியதுதான். சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ஒரு மக்கள் மன்றம். இங்கே மக்கள் ஆட்சி நடைபெறுகிறது. மக்களாட்சியின் சட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒரு தலைமை போலீஸ் அதிகாரி விதிகளுக்குப் புறம்பாக வேலை செய்கிறார். அவருக்கு சட்டம் நன்றாகத் தெரியும். சட்டம் தெரியாது என்று அவர் சொல்ல முடியாது. ஐ.ஜி. சட்டம் தெரியாதவர் என்று சொல்ல முடியாது. Ignorance of law is not an excuse சட்டம் தெரியாது அல்லது சர்க்கார் உத்தரவு தெரியாது என்று அவர் சொல்வதாக இருந்தால், சர்க்கார் உத்தரவு தெரியாத அதிகாரியை 'சாக்' பண்ணவேண்டியதுதான். இப்படிப்பட்ட பல்வேறு காரியங்கள் இதிலே இடம்பெற்றிருப்பதால் இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். கமிட்டியில் அவரை விசாரிக்க வேண்டும். அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். லெஜிஸ்லேச்சர், ஜுடிஷியல் இரண்டையும் ஓவர்டேக் பண்ணக்கூடிய அளவுக்கு அவர் போயிருக்கிறார். ஆகவே, ஸ்ட்ரேசி, ஐ.ஜி. அவர்களை பிரிவிலேஜ் கமிட்டியில் அழைத்து, விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக இதை பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, திரு. சுப்பு அவர்கள் தமிழக காவல்துறை தலைமை அதிகாரி மீது ஒரு உரிமைப் பிரச்சனையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல; அவர் பேசும்போது மிகவும் உணர்ச்சி வசத்தோடு அவருக்கு பணியை நீட்டித்துக் கொடுத்தது சரியல்ல; மேலும் இத்தகைய காரியங்களைச் செய்ததற்கு அவரை நீக்கினால் கூட பொருத்தமானது என்ற அடிப்படையில் வேகமாகப் பேசினார். ஆனால் சரியான விவரங்கள் அவருக்கு தெரிந்திருந்தால் அவரே அரசாங்கத்தில் நிலையைப் புரிந்து கொள்வார் என்பதை நான் நன்றாக உணர்வேன்.

திருச்சியில் தலைமை காவல் அதிகாரி அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு கொடுத்த பேட்டியைப்பற்றி அவர்கள் குறிப்பிடும்போது அவர் முக்கியமானது, கொள்கை சம்பந்தமானது, அதை அறிவித்திருக்கிறார் என்று சொன்னார்கள். அது முக்கியமானதுதான். கொள்கை சம்பந்தமானதுதான். ஆனால் அதை ஐ.ஜி. தெரிவிக்கலாமா? முதலமைச்சர் அல்லவா தெரிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள்.

1979 மார்ச் 30] [திரு. ச. இராமச்சந்திரன்)

நான் அதற்குச் சொல்ல விரும்புவது, முதலமைச்சர் அவர்கள் இதே மன்றத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு ஒருவேளை மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு அது முக்கியமானதாக, கொள்கை சம்பந்தப்பட்ட அறிவிப்பாகத் தெரியாமல் போய்விட்டதோ என்று தான் கருதுகிறேன். 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 26-ந் தேதி அன்று நம்பிக்கை யில்லாத் தீர்மான விவாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் பதில் அளிக்கையில் இதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். புதிதாக ஒரு திட்டத்தைக் கொண்டுவரலாமா என்று யோசித் துக்கொண்டிருக்கிறோம். காவல் துறையை மூன்றாகப் பிரிக்க லாமா ? மதுவிலக்குத் தொடர்பான வழக்குகள் பற்றியது ஒன்று. இன்னொன்று, வன்முறை, கலவரங்கள் சம்பந்தப் பட்ட குற்றங்களுக்கு. நிர்வாகத்தைக் கவனித்து, ஆங்காங்கே மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற பணிக்கு அது தொடர்பான வழக்குகளுக்கு மற்றொன்று. இப்படி இந்த மூன்று பிரிவு களாகக் காவல்துறையைப் பிரிக்கலாமா என்று திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம் ; அதற்கு அவர்களைக் கேட்டிருக் கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இந்த சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக இதை அறிவித்திருக்கிறார்கள். ஒருவேளை திரு. சுப்பு அவர்கள் இங்கே இருந்து, அதைக் கேட்கவில்லையோ என்பதற்காக அவரை 'சாக்' பண்ண வேண்டுமென்று நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். இந்த அறிவிப்பு இந்த மன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இங்கே தெரிவிக்கப் பட்ட அறிவிப்பின் அடிப்படையில் இப்படி முதலமைச்சர் அறிவித்து இருக்கிறாரே ; அதை என்ன செய்யப் போகிறீர்கள்? மூன்று தலைமை காவல் அதிகாரிகள் என்றால் மூன்று பேருக் கும் இடையே முரண்பாடு வந்தால் என்ன செய்வது என்று பத்திரிகையாளர்கள் கேட்டிருக்கிறார்கள். தலைமை காவல் அதிகாரி பத்திரிகையாளரிடம் சொல்லும்போது, சில மாநிலங் களில் அத்தகைய நிலைமை ஏற்படும்போது 'டைரக்டர் ஜெனரல்' பதவி கூட வைத்திருக்கிறார்கள். அப்படி கூட போடலாம் என்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 10-20]

ஆகவே அவர்கள் அங்கே தெரிவித்தது கூட I mentioned that I was thinking of even a more Senior Officer such as Director-General which other States already has. ஆக ஒரு கருத்தைத்தான் அங்கே தெவித்திருக்கிறாரே தவிர அது ஒரு கொள்கை அறிவிப்பு அல்ல. அரசாங்கம் ஒரு முடி வினை எடுத்து அந்த முடிவினை அவர்கள் அறிவிக்கவில்லை. ஏற்கெனவே இந்தப் பேரவையில் முதல்வரவர்கள் அறிவித்த தற்கொப்ப பதிலளிக்கின்ற வகையிலேதான் அவர் அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

[திரு. ச. இரரமச்சந்திரன்] [1979 மார்ச் 30

அதுமட்டுமல்ல. அதிகாரிகள் தங்களுடைய கருத்துக் களைச் சொல்லலாம் என்பதைப் பற்றி அரசாங்கத்தினுடைய உத்தரவு ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முக்கியமான அறிவிப்புகள் அமைச்சர்களால்தான் செய்யப் பட்டுள்ளது. சாதாரணமாக ரகசியம் அல்லாதவைகள் மற்றும் நடைமுறையிலே வரக்கூடியவைகள் எல்லாம் அமைச் சர்கள்தான் சொல்ல வேண்டும் என்ற நிலை இருக்க வேண்டிய தில்லை என்று அண்மையிலே ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட் டிருக்கிறது. இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டத்திற்கு ஒரு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் இது அவை உரிமை மீறியதாகாது என்று தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பற்றிய எனது தீர்ப்பை நாளை தெரிவிக்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருப்பரங்குன்றம் சம்பவம் குறித்து அரசு அறிவித்த முடிவுகளை வழக்கறிஞர்கள் நிராகரித்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத்தலைவர்; ''திருப்பரங்குன்றம் சம்பவம் சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 27-ந் தேதியன்று சட்டமன்றப் பேரவையில் முன்னவர் அறிவித்த அரசாங்க முடிவு களைஅனைத்து வழக்கறிஞர்களும் நிராகரித்ததின் விளைவாகவும் தொடர்ந்து நீதிமன்றத்தை பகிஷ்காரம் செய்ய முடிவு செய்துள்ள தாலும்,உயர்நீதிமன்ற காம்பவுண்டுக்குள் நகர போலீஸ் சட்டம் 41-வது விதி அமல்படுத்தியதின் விளைவாகவும் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்கவேண்டும்'' என்று கேட்டு திரு.ரா.உமாநாத், திரு. ரா. கிருஷ்ணன், திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. கு. ரமணி, திரு. மு. ஆறுமுகம், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. செ. சிவசாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. என். கிட்டப்பா, திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. சோ. அழகர்சாமி, திரு. கே. கந்தசாமி, திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத் துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன்: தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நானும் ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்து கொடுத்திருந்தேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, உட்காருங்கள்.